# கர்த்தர் தமது வார்த்தையை எப்பொழுதும் நிறைவேற்றுகின்றார்! (18:9-22)

*சூரிய வெளிச்சம் பிரகாசமாயிருந்தும் கூட காற்றில் ஒரு குளுமை இருந்தது. அது 1989ம் ஆண்டின் அக்டோபர் மாதப் பின் பகுதியாகும். எங்கள் சிறிய குழுவானது "சந்தை வெளி" என்ற அகோராவின் சிதிலங்களினிடத்தில் ஒன்றுகூடியிருந்தது. நான் இப்பொழுது மற்றவர்களுக்கு முன்னால் நின்று, கல்லியோனால், பவுல் விசாரிக்கப்பட்டதை வாசிக்கத் தலைப்பட்டேன். நியாயம் விசாரிப்பதற்கென்று குறிப்பிடத் தக்க அந்த ரோமர் உட்காரப் பயன்பட்ட* bema *என்ற கல் மேடை எனக்குப் பின்னால் இருந்தது.* bema*வுக்குப் பின்னால்,* Acro-Corinth *வானளாவும் கோபுரத்துடன் விளங்கியது. நான் எனது தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு தொடங்கி னேன்: "கல்லியோன் என்பவன் அகாயா நாட்டிற்கு அதிபதி யானபோது, யூதர்கள் ஒருமனப்பட்டு, பவுலுக்கு விரோதமாய் எழும்பி, அவனை நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டு போய் ..."*

நான் பயணம் செய்து கொண்டிருந்த சுற்றுலாக் குழுவானது பவுலின் மிகக் குறிப்பிடத்தக்க ஊழியங்களில் ஒன்று நடந்த இடமான கொரிந்து நகரத்தை அடைந்தது. பவுல் தமது நற்செய்திப் பயணங்கள் மூன்றிலும் ஊழியம் செய்திருந்த இரு பெரும் நகர்கள் கொரிந்து மற்றும் எபேசு ஆகும். அவர் கொரிந்துவில் குறைந்தது ஒன்னறை ஆண்டுகளும், எபேசுவில் இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாகவும் தங்கியிருந்தார்.

கொரிந்து நகரில் பவுலின் ஊழியத் தொடக்கத்தைப் பற்றி

*நாம் ஏற்கனவே கண்டோம், அங்கு அந்த அப்போஸ்தலர், பயம் மற்றும் சந்தேகத்துடன் போராடினார். தெய்வீக உறுதிப் பாட்டைத் தருவதற்காக இயேசு பவுலுக்குத் தரிசனமான நிகழ்ச்சியுடன் நாம் முந்திய பாடத்தை முடித்தோம். இந்தப் பாடத்தை நாம், இயேசு பவுலுக்குக் கொடுத்த வாக்குத் தத்தங்களுடன் தொடங்கி, பிறகு அவைகளின் நிறைவேற்றத் தையும் கவனிப்போம். கர்த்தர் தமது வார்த்தையை எப்பொழுதும் நிறைவேற்றுகின்றார் என்பதே நமக்குச் செய்தியாக இருக்கின்றது! நீங்கள் உங்கள் வாழ்க்கையை-மற்றும் ஆத்துமாவை-அந்த சத்தியத்திலே பணயம் வைக்க முடியும்!*

## கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம்: பவுலுக்கு தீங்கு செய்யப்படாது *(18:9, 10)*

*கர்த்தர் பவுலுக்குத் தரிசனமானபோது, முதலில் அவர், "நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே;" (வ. 9) என்று கூறினார். துரதிர்ஷ்டவசமாக, நம்மில் சிலர், பயப்படுவதால் பேசுவ தில்லை. இயேசு, "நான் உன்னுடனே கூட இருக்கின்றேன்" (வ. 10அ) என்று பவுலுக்கு உறுதியளித்தார். அதை நாம் நினைவு கூர முடிந்தால், அவருக்காகப் பேசுவதில் நமக்குள்ள பயங்களின் பெரும்பகுதி நீக்கப்பட்டு விடும் (மத். 28:19, 20).*

*அதன் பிறகு கர்த்தர் பவுலுக்கு இரண்டு வாக்குத்தத்தங்கள் கொடுத்தார். ஒன்று வெளிப்படையாகக் கூறப்பட்டது, இன்னொன்று மறைமுகமாக உணர்த்தப்பட்டது. "உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை" (வ. 10ஆ) என்பது வெளிப்படையாய்க் கூறப்பட்ட வாக்குத் தத்தமாகும். பொறாமையுள்ள யூதர்களின் தவிர்க்க முடியாத தாக்குதலைப் பற்றிப் பவுல் பயந்திருந்தார் என்ற ஆலோச னையை இது நமக்குத் தருகின்றது. ஒருவேளை அவர், தாம் கொரிந்தியருக்குச் செய்ய முடிந்த அளவு நன்மைகள் செய்து விட்டதாகவும், தமது எதிரிகள் தம்மைத் தவறாக நடத்த வாய்ப்புப் பெறுமுன் நகரத்தை விட்டுப் போய்விடவும்*

யோசனை செய்திருக்கலாம். பலமான மனிதர்கள் கூட தொடர்ந்து வரும் நிலையான எதிர்ப்பினால் நிலை குலைந்து போய்விடக் கூடும். இருப்பினும், கிறிஸ்து பவுலுக்கு, அவர் (பவுல்) மற்ற நகரங்களில் துன்புறுத்தப்பட்டிருந்தாலும் கொரிந்து பட்டணத்தில் துன்புறுத்தப்படுவதில்லை என்ற பெருமிதமான வாக்குத்தத்தம் கொடுத்தார்.

வெளிப்படையாகக் கூறப்பட்ட இந்த வாக்குத்தத்தத்து டன், "இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு" (வ. 10இ)[1] என்ற இயேசுவின் வார்த்தைகளில் மறைமுகமான வாக்குத்தத்தம் ஒன்றுள்ளது. ''புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்வது" (15:14) என்ற தேவனுடைய உறுதிப்பாட்டுடன் இவ்வாக்குத்தத்தம் தொடர்பு கொண்டுள்ளது. மனிதர்களின் இருதயங்களை அறிந்திருக்கிற தேவன், கொரிந்து நகரத்தில், வாய்ப்புக் கிடைத்தால், தம்மை நோக்கித் திரும்பக் கூடிய புறஜாதியார் இருந்தார்கள் என்பதை அறிந்திருந்தார். உண்மையில், இயேசு கொரிந்து நகரில் பவுல் தொடர்ந்து தங்கியிருந்து பிரசங்கித்தால், மற்றம் பலர்[2] ஞானஸ்நானம் பெறுவார்கள் என்றே கூறினார். (நமது நகரங்கள் மற்றும் பகுதிகளிலும் ''பல மக்கள்'' இருக்கின்றார்கள் என்று கர்த்தர் நமக்கும் கூறக் கூடும் என்பதில் சந்தேகம் இல்லை -ஆனால் அவரைப் பற்றி நாம் அவர்களுக்குக் கூறவில்லையென்றால் அவர்கள் ஒருபொழுதும் அவரை அறியமாட்டார்கள்!).

இயேசுவின் வாக்குறுதியானது பவுலின் எதிர்காலம் பற்றிய பயம் நிறைந்த கவலையை ஒரு எதிர்பார்ப்பாக மாற்றி விட்டது. "அவன் ஒரு வருஷமும் ஆறு மாதமும் அங்கே தங்கி, தேவ வசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம் பண்ணிக் கொண்டு வந்தான்" (வ. 11). ஏற்கனவே அவர் அங்கிருந்த காலமும் இந்த ஒன்னரை ஆண்டுக்குள் அடங்கியதா இல்லையா என்று நாம் அறியவில்லை. அது போலவே, வசனம் 18ல் கூறப்படும் ("அநேக நாள்") என்பது இப்பதினெட்டு மாதங்களுடன் கூடுதலாகச் சேர்ந்ததா இல்லையா என்பதையும் நாம் அறிவதில்லை. பவுல் குறைந்தது ஒரு வருடமும் ஆறு மாதமும் அங்கு தங்கியிருந்தார் - மூன்று பயணங்களிலும், அதிக நாள் ஓரிடத்தில் தங்கியது என்ற வகையில் இது இரண்டாவது நிலையில் உள்ளது - என்று

கூறுவதே பாதுகாப்பானதாகும். இந்த நகரம் (கொரிந்து) சபையொன்றை நிலைநாட்டுவதற்கு ஏற்ற இடம் என்று கருதப்படத் தகுதியற்றதாக(தகுதி மிகவும் குறைந்ததாக)க் காணப்பட்டது. ஒரு வேளை அதிகமாய் விதைப்பதற்குப் பதிலாக நாம் மண் பரிசோதனை செய்வதில் அதிக நேரத்தைச் செலவிடுவதுண்டோ!

## நிறைவேற்றப்பட்ட வாக்குத்தத்தம்: பவுலுக்குத் தீங்கு செய்யப்படவில்லை! (18:12-18)

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் பெரும்பாலும், பல ஆண்டுகளுக்குப் பிறகு தான் நிறைவேறுகின்றன. இந்த நிகழ்ச்சியிலோ, உடனடியாக நிறைவேறியது. தொடர்ந்து வரும் வசனங்களில், தேவன் தமது வார்த்தையை புறஜாதியார் ஒருவரிடத்தில் நடப்பித்த கிரியையின் மூலமாக - எவ்விதம் நிறைவேற்றினார் என்பதை லூக்கா காண்பித்தார்.

"கல்லியோன் என்பவன் அகாயா நாட்டிற்கு அதிபதியான போது, யூதர்கள் ஒருமனப்பட்டு,[3] பவுலுக்கு விரோதமாய் எழும்பி, அவனை நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டு போய்," (வ. 12). பவுல் தமது மூன்று பயணங்களிலும் சந்தித்த ரோம அதிகாரிகளில் கல்லியோன் என்பவர் மிகவும் முக்கியமானவர் ஆவார். கல்லியோனின் சகோதரரான செனகா என்பவர் ஸ்தோயிக்கத்தில் புகழ் பெற்ற தத்துவ ஞானியாகவும், நீரோவுக்கு ஆசானாகவும் இருந்தவர். இவர் (கல்லியோன்) மிகவும் செல்வாக்குள்ளவர் என்று அரசகுல எழுத்தாளர்கள்[4] பலரால் குறிப்பிடப்பட்டுள்ளார். டெல்பியில்[5] கண்டெடுக்கப் பட்ட கல்வெட்டுத் துண்டு ஒன்றில் இருந்து கொரிந்து நகரில் கல்லியோனின் அதிகாரப் பொறுப்பேற்பு மிகச் சரியாக, கி.பி. 51 ஜூலையில் தொடங்கியது என்று அறிய முடிகின்றது.

மற்ற நகரங்களில் நடந்தது போல, யூதர்கள் பவுலை நகரத்தின் நியாயாதிபதிகளுக்கு முன்பாக கொண்டு செல்லா மல், அகாயா நாடு (தலைநகர்-கொரிந்து) முழுவதற்கும் அதிபதியாய் இருந்தவரிடத்தில் கொண்டு சென்றார்கள்

என்பதைக் கவனியுங்கள். கல்லியோன் போன்ற வல்லமை யுள்ள மனிதர் ஒருவரால் மேற்கொள்ளப்படும் எதிர்ப்புள்ள ஆளுகையானது மற்ற எல்லா ரோமானிய மாகாணங்களுக்கும் ஒரு முன்மாதிரியைக் காட்டுவதாய் இருக்க முடியும். இந்த நிகழ்ச்சியின் சட்ட ரீதியான மற்றும் அரசியல் ரீதியான முக்கியத்துவத்தை அதிகமாய் வலியுறுத்தத் தேவையில்லை.

கல்லியோன் என்ற இந்த ரோம அதிகாரி முதன்முதல் கொரிந்து நகருக்கு வந்த போது, யூதர்கள் பவுலை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள் என்று பலர் நம்புகின்றார்கள். அப்படி நடந்திருந்தால், அவர்கள் ஒரு வேளை, கல்லியோன் அப் பகுதியில் இருந்த மக்களுக்கு ஆரம்பத்தில் நல்லுறவு ஒன்றை நிலைநாட்டிக் கொள்ளுவதில் கவலையாய் அல்லது அக்கறை யாய் இருந்து பெரும் கூட்டமான குடிமக்களால் கொண்டு வரப்பட்ட எதிர்ப்பைப் பற்றி மிகவும் ஈடுபாடு கொள்வார் என்று நினைத்திருக்கலாம். கல்லியோனின் நேர்மையான குணத்தை அவர்களால் முன் காண முடியாமல் இருந்தது.

யூதர்கள் பவுலை, "நியாயாசனத்துக்கு முன்பாக" கொண்டு போனார்கள் என்று 12ம் வசனம் கூறுகின்றது. "நியாயாசனம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை bema என்பதாகும். கொரிந்துவில் அகோராவின் மையத்தின் அருகே கற்களால் கட்டப்பட்டு, சலவைக்கல் பாவப்பட்ட சற்று உயரமான ஒரு மேடையே இந்த bema ஆகும். உரையாற்றுதல் உட்படப் பொது விழாக்கள் பலவற்றுக்கு அது பயன்படுத்தப் பட்டது. இருந்தாலும், இந்த bema என்பது அடிப்படையாக, நீதிமன்றம் நடக்கும் இடமாகவே பயன்படுத்தப்பட்டது.

பழைய கொரிந்துவில் bema இன்னமும் இருக்கின்றது. நீல மற்றும் வெள்ளை வண்ணச் சலவை கற்கள் அதன் பாறை முகப்புடன் இணைந்த நிலையில் அது நன்றாய்ப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. bemaவுக்கு முன்னால், குற்றம் சாட்டப் பட்டவர் நின்ற இடத்தில் ஒரு சிறிய தூண் உள்ளது. அத்தூணுடன் பவுல் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த நிலையில் அவரது தலைவிதி கல்லியோனின் கையில் இருந்த அச்சூழ் நிலையை மனதில் சித்தரித்துக் காணுங்கள்.

யூதர்கள் எவ்விதத்தில், "[பவுலை] நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டு வந்தார்கள்" என்பது பற்றி நமக்குக்

கூறப்படவில்லை. அவர்கள் அவரை இழுத்துக் கொண்டு போயிருக்கலாம் (16:19); ஒருவேளை நீதிமன்றமானது அவர் வரும்படி ஆணையிட்டிருக்கலாம். பங்கேற்பவர்கள் எல்லாரும் அங்கு வந்த பொழுது, அதிபதிக்கு முன்பாக யூதர்கள், தங்கள் குற்றச்சாட்டை பயபக்தியுடன் முன்னிலைப்படுத்தினார்கள்: "இவன் வேதப்பிரமாணத்துக்கு விகற்பமாய்த் தேவனைச் சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிக்கிறான்" (18:13). "வேதப்பிரமாணம்" என்ற வார்த்தை மோசேயின் பிரமாணத்தைக்[6] குறிப்பிட்டதாகச் சிலர் நினைக்கின்றார்கள்; மற்றவர்களோ ரோமருடைய சட்டத்தை யூதர்கள் குறிப்பிட்டதாக நினைக்கின்றார்கள். அவர்கள் மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் குறித்திருந்தால், யூத மார்க்கம் என்பது "சட்டப் பூர்வமான மார்க்கம்" என்பதே அவர்களின் வாதமாய் இருந்தது, யூதர்களுக்குப் பாதுகாப்பு வாக்களிக்கப் பட்டிருந்ததால், பவுல் அவர்களை தொந்தரவு செய்வது தடை செய்யப் பட வேண்டும். அவர்கள் ரோமருடைய சட்டத்தைக் குறிப்பிட்டிருந்தால், கிறிஸ்தவர்கள் சட்ட விரோதமான ஒரு மார்க்கத்தைப் பின்பற்றுவதால், அம்மார்க்கம் ரோமரால் பாதுகாப்பளிக்கப் படக்கூடாது என்று யூதர்கள் கிறிஸ்தவர்கள் மேல் குற்றம் சாட்டியிருக்க வேண்டும். எவ்வழியிலும் பவுல் (அத்துடன் மறைமுகக் கருத்தில் எல்லாக் கிறிஸ்தவர்களும்) ரோம அரசால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று அவர்கள் வாதிட்டார்கள்.

அந்நேரத்தில், தேவனுடைய வாக்குத்தத்தமானது நிச்சயமற்றதாக தேவ நம்பிக்கையற்றவர்களுக்குத் தோன்றியிருக்கலாம். பவுலினிடத்தில் கர்த்தர், "உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை" என்று கூறியிருந்தார், ஆனால், இவ்விடத்தில் அவர் தாக்குதலின் கீழிருந்தார். மேலும் மற்ற ஒவ்வொரு நகரிலும் பவுலுக்கு எதிராக யூதர்கள் தங்கள் செல்வாக்கை உபயோகிக்க முடிவு செய்தபோது, பவுல் மிகவும் சிரமத்துடன்தான் உயிர் தப்பினார் (13:50; 14:5, 6, 19; 16:19-24; 17:6-10, 13). இந்த நிகழ்ச்சியில் பவுல் துன்பத்திலிருந்து எவ்விதத்தில் தப்பிக்க முடியும்?

14ம் வசனம், "பவுல் பேசுவதற்கு எத்தனப்படுகையில் ..." என்று தொடங்குகின்றது. அவர்களுடைய குற்றச்சாட்டுகளில்

மதியீனத்தைக் காண்பிக்கப் பவுல் தயாராயிருந்தார்; அவர் கல்லியோனுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் தயாராயிருந் திருப்பார் (அப். 22; 23; 24; 26 ஆகியவற்றைக் காணவும்). ஆயினும், அவர் எதுவும் கூறுவதற்கு முன்பாகவே, கல்லியோன் பேசினார்:

> கல்லியோன் யூதரை நோக்கி: யூதர்களே, இது ஒரு அநியாயமாய், அல்லது பொல்லாத நடக்கையாயிருக்கு மேயானால் நான் உங்களுக்குப் பொறுமையாய்ச் செவி கொடுக்கிறது நியாயமாய் இருக்கும். இது சொற்களுக்கும், நாமங்களுக்கும்,[7] உங்கள் வேதத்துக்கும் அடுத்த தர்க்க மானபடியினாலே, இப்படிப்பட்டவைகளைக் குறித்து விசாரணை செய்ய எனக்கு மனதில்லை, நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி (வ. 14ஆ, 15).

யூதர்களுடனான பவுலின் மோதல்களில் அவருடைய எதிரிகள் முதன் முறையாகத் தாங்கள் எதிர்த்து நிற்க முடியாத நேர்மையான ஒரு ரோம அதிகாரியை முகமுகமாய்ச் சந்திக்க வேண்டியதாயிற்று! யூதமார்க்கத்திற்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையில் இருந்த அடிப்படை வேறுபாடுகளைப் பற்றி கல்லியோன் குழப்பமடைந்திருக்கலாம், ஆனால் அவர் பின்வருவதைப் புரிந்து கொண்டார்: பவுலுக்கும் யூதர்களுக்கும் இடையில் இருந்த போராட்டம் எப்படிப்பட்டதாய் இருந்தாலும், அது தனது ஆளுகை எல்லைக்கு உட்பட்டதல்ல என்று அவர் புரிந்து கொண்டார். ரோமச்சட்டத்தின் அடிப்படையில் அவர் நியாயத்தீர்ப்புக் கூற வேண்டுமென்று யூதர்கள் கேட்டுக் கொண்டிருந்ததால், அவர்களின் சொந்தப் பிரமாணத்தில் பிரச்சனை உள்ளது என்பதை அவர் புரிந்து கொண்டார். அந்த வழக்கை அவர் நீதிமன்றத்தை விட்டுத் தூக்கியெறியத் தயங்கவில்லை.

கல்லியோன் தமது அலுவலர்களை நீதிமன்றத்திலிருந்து வெளியேறும்படிக்குக் கட்டளையிட்ட போது, யூதர்களின் அதிர்ச்சியூட்டப் பெற்றிருந்த திகைப்பைக் கற்பனை செய்து பாருங்கள். விரைவில் அங்கிருந்து செல்லாதவர்கள், lictorன் தடியடியை ருசி பார்த்திருந்திருப்பார்கள். இவ்விதமாக, கல்லியோன் ‘‘அவர்களை நியாயாசனத்தினின்று துரத்தி

*விட்டான்" (வ. 16).*

*முரண்பாடான குறிப்பொன்றை இவ்விடத்தில் லூக்கா கூட்டித் தருகின்றார்: "அப்பொழுது கிரேக்கரெல்லாரும் ஜெப ஆலயத் தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து, நியாயா சனத்துக்கு முன்பாக அடித்தார்கள்" (வ. 17அ). இதற்கு முன் லூக்கா, "ஜெப ஆலயத் தலைவனாகிய" கிறிஸ்புவின் மன மாற்றம் பற்றிக் கூறியிருந்தார் (வ. 8); அவரது இடத்தை சொஸ்தேனே பற்றியிருக்கலாம். யூதர்களின் தலைவன் என்ற முறையில் பவுலுக்கு எதிராகக் குற்றம் சாட்டிப் பேசினார் என்பதால் இவர் (சொஸ்தேனே) தவறாக நடத்தப்பட்டிருக்கலாம்.*

NKJV*யில் இவ்விடத்தில் அவர்கள்* (they) *என்று தெளிவற்றுக் காண ப்படுகின்றது. சில பழங்கால வசனப் பிரதிகளில் "கிரேக்கர்கள்"* (KJV *மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு ஆகியவற்றைக் காணவும்) என்றுள்ளது. அப்படியானால், அகோராவைச் சுற்றிக் கொண்டிருந்த வீணர்கள் அங்கு நடந்த நிகழ்ச்சியை, யூதர்களின்மேல் தங்கள் வெறுப்பைக் காட்டுவதற்குப் பயன்படுத்தியிருக்கக் கூடும். நல்ல ஆதாரம் கொண்ட கையெழுத்துப் பிரதிகளில் "அவர்கள்" என்று மட்டுமே இவ்விடத்தில் உள்ளது, இந்த "அவர்கள்" என்ற பிரதிப் பெயர்ச் சொல்லானது இதற்கு முந்திய வசனங்களில் (வ. 14-16) குறிப்பிடப்பட்டிருந்த யூதர்களையே குறிப்பதாயிருந்தது. ஆகவே சொஸ்தேனே, விஷயத்தைச் சரியாகக் கையாண்டிருந்தால் இந்தச் சங்கடம் ஏற்பட்டிருக்காதே என்று எண்ணிய யூதர்களே தங்களின் சொந்தத் தலைவனுக்கெதிராகத் திரும்பியிருக்கலாம்.*

*இதைத் தொடர்ந்து வரும் வார்த்தைகள் இதை விடப் புதிரானவைகளாக இருக்கின்றன: "இவைகளில் ஒன்றையுங் குறித்துக் கல்லியோன் கவலைப்படவில்லை" (வ. 17ஆ). ஒன்றுமறியாத மனிதர் ஒருவர் அடிக்கப்பட்டது பற்றி கல்லியோன் கவலைப்படவில்லை என்பதே இதன் பொதுவான அர்த்தமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இது உலக எழுத்தாளர்கள் சித்தரிக்கின்ற அவரது ஆளுமைத் தன்மைக்கு ஏற்றதாயிருக்கவில்லை.[8] ஒருவேளை, "இவைகளில்" என்பது சொஸ்தேனே அடிக்கப்பட்டதைக் குறிப்பிடாமல், யூதர்களால் பவுலுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளைக் குறிப்பதாய் இருக்கலாம். பார்க்ளே அவர்கள், "உண்மை அர்த்தம்*

என்னவென்றால், கல்லியோன் ஒருதலைப் பட்சமாய் இராமல் யூத முக்கியஸ்தர்களால் தம் மீது செல்வாக்குச் செலுத்தப் படுவதை அனுமதிக்காதிருந்தார் என்பதேயாகும்.

வசனம் 17ன் சரியான அர்த்தம் எதுவாயிருப்பினும், நடந்த சம்பவங்களின் முழு வரிசையும் நமக்குத் திகைப்பூட்டு வதாகவே இருக்கின்றன. பவுல் துன்பப்படுத்தப் படவும் இல்லை, அத்துடன் அவர் உரிமை நிலை நாட்டப் பெற்றார். அவரைத் தண்டிப்பதற்குத் திட்டமிட்ட யூதர்கள் தாங்களே தண்டிக்கப்பட்டார்கள். தேவன்-எதிர்பாராத ஆதாரங்களை, ரோம உயர் அதிகாரி ஒருவரைப் பயன்படுத்தி-தமது வார்த்தையை நிறைவேற்றினார்.

சட்ட ரீதியாகப் பவுல் குற்றமற்று இருந்தார் என்பதைக் கல்லியோன் உணர்ந்து கொண்ட செயலானது "சபைக்குப் பத்து ஆண்டுகள் சமாதானத்தைக் கொண்டு வந்தது" என்று ரிக் ஆட்ச்லியின் பிரசங்கத்தில் கூறப்பட்டது. கல்லியோனால் பவுலின் மேல் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தால் அது எப்படி எல்லா மாகாணங்களுக்கும் பரவியிருக்குமோ, அது போலவே பவுலை விடுதலை செய்த நிகழ்ச்சியும் மற்ற மாகாணங்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது. பவுலைத் தண்டிக்கும்படி ரோம அதிகாரிகள்மேல் யூதர்கள் தங்கள் செல்வாக்கைச் செலுத்த மறுபடியும் முயற்சி செய்வதற்கு பல ஆண்டுகள் ஆயிற்று.

பவுலின் விசாரணை(அல்லது விசாரணையின்மை)க்குப் பிறகு "பவுல் அநேக நாள் அங்கு இருந்தார்" (வ. 18அ).[9] இந்த "அநேக நாட்களில்" பவுலின் ஊழியத்தைப் பற்றி லூக்கா எந்த விபரங்களையும் பதியவில்லை, ஆனால் கர்த்தரின் இரண்டா வது வாக்குத்தத்தமானது மெய்ப்பிக்கப்பட்டது என்று நாம் உறுதியாய்க் கூற முடியும்: பவுல் தொடர்ந்து பிரசங்கித்து போதித்தபோது, மற்றும் பலர் கிறிஸ்தவர்களானார்கள்.

ஜெப ஆலயத்தின் தலைவராயிருந்து, அடிக்கப்பட்ட அந்த சொஸ்தெனேயும் கூட இவர்களில் ஒருவராய் ஆகியிருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. பவுல் கொரிந்தியர்களுக்குத் தமது முதல் நிருபத்தை எழுதும்போது, தம்முடன் ஊழியம் செய்து வரும், கொரிந்தியர்களால் நன்கு அறியப்பட்டவருமான சொஸ்தெனே என்பவரின் பெயரைக் குறிப்பிட்டார் (1கொரி. 1:1). சொஸ்தெனே அடிக்கப்பட்ட பிறகு, பவுலும்

*கிறிஸ்புவும் அவரது வீடு சென்று அவரைச் சந்தித்தார்கள் என்று யூகித்து, அவர்கள் அவரது காயங்களைக் கழுவி, அவருக்கு இயேசுவைப் பற்றிக் கூறியதைச் சித்தரித்துக் காண்பது மித உற்சாகமுள்ளதாயிருக்கும் - ஆனால் இக்கருத்துகள் யாவற்றை யும் நாம் யூகித்தறியும் எல்லையில் விட்டுவிட வேண்டும்.*

*குறிப்பிடத் தக்க வகையில் இருந்த இன்னொருவர் மனமாறினார் என்பதை நாம் உறுதியாக அறிகின்றோம். பின்னாளில், கொரிந்துவில் இருந்து ரோமருக்கு நிருபம் எழுதிய போது பவுல், பின்வரும் வாழ்த்தையும் அதில் உள்ளடக்கினார்: "... பட்டணத்து உக்கிராணக்காரனாகிய ஏரஸ்தும் ... உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:23). செல்வாக்கு மிக்க யூதர்கள் மட்டுமின்றி,செல்வாக்குள்ள ஒரு ரோமரும் கூட கொரிந்துவில் கிறிஸ்தவரானார்! (2 தீமோ. 4:20) கொரிந்துவின் சிதிலங்களில் நடந்த அசாதாரணமான ஒரு புதைபொருள் ஆய்வில், இந்த அதிகாரியைச் சார்ந்த குறிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. கொரிந்துவின் மாபெரும் அரங்க சாலைக்கு முன்புறம் உள்ள மேடையில் பின்வரும் செதுக்கெழுத்துக்களுடன் ஒரு கல் பதிக்கப்பட்டிருந்தது: "எரஸ்து தமது* aedileship,*[10] அதாவது உக்கிராணத்துவ உத்தியோகத்தின்பால் கொண்ட அக்கறை யுடன் தமது சொந்த செலவில் இந்த நடைமேடையை ஏற்படுத்தினார்." செதுக்கப் பட்ட எழுத்துக்கள் காரீயத்தினால் பற்றிப் பிடிக்கும்படி வெண்கலத்தினால் நிரப்பப் பெற்றிருந் தன. இந்நாட்களில் வெறும் எழுத்துக்களே எஞ்சியிருக்கின்றன, ஆனால் அவைகளைச் சுலபமாய்ப் படிக்க முடியும்.*

*அந்த "அநேக நாட்களின்" போது, கொரிந்துவைச் சுற்றி யுள்ள பகுதிகளிலும் கூடப் பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அகாயா முழுவதிலும் சபைகளை நிலைநாட்டியிருக்கலாம்.[11] அநேகமாய் இந்த வேளையில்தான் 2 தெசலோனிக்கேயர் நிருபம் எழுதப்பட்டிருக்க வேண்டும். பவுல் அப்பகுதியில் தொடர்ந்து ஊழியம் செய்கையில், யூதர்கள் மற்றும் ரோம அதிகாரிகளின் தொல்லை எதுவும் இல்லாமல், ஏராளமான பதில்செயல்களால் ஆசீர்வதிக்கப்பட்டார். எவ்வளவு முறைகள் அவர் இயேசுவின் வாக்குத்தத்தங்கள் பற்றியும்-அவை எவ்வளவு அற்புதமாக நிறைவேற்றப்பட்டன என்பது பற்றியும் மறுபடியும் நினைத்துப் பார்த்திருப்பார்!*

*வசனம்18ன் முடிவில், லூக்கா வினோதமான குறிப்பு ஒன்றை வீசுகின்றார்: "... தனக்கு ஒரு பிரார்த்தனை உண்டா யிருந்தபடியினால் கெங்கிரேயா பட்டணத்தில் தலைச்சவரம் பண்ணிக் கொண்டு ... ." இதைப் பற்றிக் கல்வியாளர்கள் நீண்ட நாட்களாகப் போராடி வருகின்றார்கள். மிகச் சரியாக அந்த வேண்டுதல் (பிரார்த்தனை) என்ன? மிகச் சரியாகப் பவுல் செய்தது என்ன? மிகச் சரியாகப் பவுல் ஏன் அதைச் செய்தார்?*[12] *இந்தக் கேள்விகளில் பலவற்றுக்குப் பதில் தரப் போதுமான விபரங்களை லூக்கா நமக்குக் கொடுக்கவில்லை, ஆனாலும், பவுல் ஏன் இதைச் செய்தார் என்பது பற்றி தர்க்கரீதியாக நம்பிக்கையாயிருக்கலாம். தெய்வீக வெளிப்பாடு ஒன்றைப் பாராட்டும் விதத்தில்தான் தேவனுக்குப் பொருத்தனை செய்து கொள்வது பொதுவான வழக்கமாய் இருந்தது; கர்த்தர் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியதற்காகப் பவுல் "உமக்கு நன்றி" என்று கூறியிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை!*

*அகாயா முழுவதிலும் பவுல் பிரசங்கிக்கையில், நாம் படித்த இந்நிகழ்ச்சியைப் பற்றி அடிக்கடி அவர் கூறி, "கர்த்தர் எப்பொழுதும் தமது வார்த்தையை நிறைவேற்றுகின்றார்! அவர் சிலவற்றைக் கூறும்பொழுது அவைகளை நீங்கள் சார்ந்திருக்க முடியும்!" என்று முடிவு வார்த்தைகளில் கூறியிருந்திருப்பார் என்று நான் யூகிக்கின்றேன்.*

## *முடிவுரை (18:18-22)*

*வசனம் 18 முதல் 22 வரை பவுலின் இரண்டாவது நற்செய்திப் பயணத்தின் முடிவு பற்றிக் கூறப்படுகின்றது. "பவுல் அநேக நாள் அங்கே தரித்திருந்த பின்பு, சகோதரரிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு, ... சீரியா தேசத்துக்குப் போகக் கப்பல் ஏறினான்" (வ. 18அ). கொரிந்து நகரில் பவுல் தமது ஊழியத்தை முடித்துக் கொண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தாம் புறப்பட்ட இடமாகிய சீரியாவின் அந்தியோகியாவுக்குத் திரும்பிச் செல்லத் திட்டமிட்டார். அவருடைய சக கிறிஸ்தவர் களும், அவருடைய நண்பர்களும், அவருடைய கூடாரத் தொழில் கூட்டாளிகளுமான "பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லா வும்*[13] *அவனுடனே கூடப் போனார்கள்" (வ. 18ஆ).*

பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் மாத்திரம் இங்கு குறிப்பிடப்பட்டிருப்பதால், ஒருவேளை பவுல், சீலாவையும் தீமோத்தேயுவையும் கொரிந்துவிலேயே தொடர்ந்து ஊழியம் செய்யும்படி அங்கேயே விட்டுச் சென்றிருக்கலாம். அப். நட. புத்தகத்தில் சீலா கொரிந்துவில் இருந்ததாகத்தான் (வ. 5) நாம் அவரைப் பற்றிக் கடைசியாகப் படிக்கின்றோம். சிறையில் பவுலுடன் பாடி ஜெபித்த இம்மனிதர் நமது பார்வையிலிருந்து மறையுமுன்பு, இரண்டாவது நற்செய்திப் பயணத்தில் இம்மனிதரின் மதிப்புமிக்க பங்கேற்பை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். சீலாவின் தொடர்ந்த ஊழியம் பற்றி, அவர் பின்னாளில் பேதுருவுடன் ஊழியம் செய்தார் (1 பேது. 5:12) என்பதைத் தவிர, மிகச் சிறிதளவே நாம் அறிகின்றோம். இருப்பினும், கர்த்தருக்கு ஒரு உண்மையுள்ள ஊழியக்காரராக, சீலா தமது ஊழியத்தைத் தொடர்ந்தார் என்று நாம் எல்லா வகையிலும் நம்புகின்றோம்.

பவுலும் அவரது கூட்டாளிகளும் சாரோனிய வளைகுடா வில் மிக முக்கியமான கொரிந்து நகரத்து துறைமுகமான, கெங்கிரேயாவில் இருந்து (வ. 18) கடல் பயணத்தைத் தொடங்கினார்கள். கொரிந்துவில் பவுலின் ஊழியத்தின் போது நிலைநாட்டப்பட்டிருக்கக் கூடிய ஒரு பிராந்திய சபை கெங்கி ரேயாவில் இருந்ததாகப் பின்னாளில் நாம் படிக்கின்றோம் (ரோமர் 16:1). அவர்களின் முதலாவது முக்கிய நிறுத்தமாக இருந்தது எபேசு நகரமாகும் (வ. 19), ஆசியா என்ற ரோம மாகாணத்தின் தலைநகரமாகவும், முன்பு பவுல் சென்று சேர விரும்பிய இடமாகவும் இருந்தது. ஆனால் முன்பு அவர் அங்கு போகாதபடிக்குத் தேவன் அவரைத் தடை செய்திருந்தார் (16:6), ஆனால் அந்தத் தடை இப்பொழுது நீக்கப்பட்ட தென்பது தெளிவு, பவுல் தாம் எபேசுவில் இருந்த குறுகிய காலத்தை, யூதர்களின் ஏற்புத் தன்மையைப் பரிசோதிப் பதற்குப் பயன்படுத்திக் கொண்டார்.

> ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, யூதருடனே சம்பாஷினை பண்ணினான். அவன் இன்னும் சில காலம் தங்களுடனே இருக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்ட போது, அவன் சம்மதியாமல், வருகிற பண்டிகையிலே எப்படியாயினும் நான் எருசலேமில் இருக்க வேண்டும்,

*தேவனுக்குச் சித்தமானால்[15] திரும்பி உங்களிடத்திற்கு வருவேனென்று சொல்லி, அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு, கப்பல் ஏறி, எபேசுவை விட்டுப் புறப்பட்டு, (18:19இ-21).*

*பவுல், ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாவையும் தாம் திரும்பி வருமுன் அங்கு நிலத்தை(ஆத்துமாக்களை)த் தயார் செய்யும் படியாக எபேசுவிலே விட்டுச் சென்றார் (வ. 19ஆ).[16] ஏறக் குறைய ஒரு மாத காலப் பயணத்திற்குப் பிறகு, அவர் சென்ற கப்பலானது, நூற்றுக்கு அதிபதியான கொர்நேலியு மற்றும் சுவிசேஷகனான பிலிப்பு ஆகியோரின் சொந்த ஊரான செசரியா நகருக்கு (8:40; 10:1; 21:8) வந்து சேர்ந்தது. "செசரியா பட்டணத்துக்கு வந்து, எருசலேமுக்குப் போய், சபையைச் சந்தித்து ..." (18:22அ). இது செசரியாவில் அல்லது எருசலேமில் கூடி வந்த பிராந்திய சபையைக் குறிப்பதாயிருக்கலாம்.[17] கடைசியில் அவர் ''அந்தியோகியாவுக்குப் போனான்'' (வ. 22ஆ); மீண்டும் ஒருமுறை அவருக்கு இதமான வரவேற்பு தரப் பட்டது, மீண்டும் ஒருமுறை அவர் கிரேக்க நாட்டில் தம்மு டனும் தமது ஊழியர்களுடனும் "தேவன் செய்தவைகளை" (14:27) அறிக்கை செய்திருப்பார் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. கொரிந்துவில் தம்மைக் கர்த்தர் விடுதலையாக்கிய தைப் பவுல் கூறியிருப்பார் என்பது நிச்சயம். "கர்த்தர் தமது வார்த்தையை எப்போதுமே நிறைவேற்றுகின்றார்! நீங்கள் அதில் நிச்சயமாய் இருக்க முடியும்!'' என்று பவுல் தம் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களிடம் உறுதியாய்க் கூறியதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது.*

*நாம் முடிக்கும் இந்நேரத்தில், இப்பொழுது நாம் படித்த வேதபாடப் பகுதியில் இருந்து நமக்குக் கிடைக்கும் பாடங் களை தொகுத்துக் கூறச் சற்று நேரம் செலவிடுவோம். கர்த்தர் தமது மக்களின் சார்பாக நிற்கின்றார் என்பது ஒரு பாடமாகும் (ஏசாயா 41:10; எபி. 13:5). நாம் நமது பிரசங்கம் மற்றும் போதனையில் உண்மையுள்ளவர்களாயிருந்தால், கர்த்தர் விளைச்சலைக் கொடுப்பார் (1 கொரி. 3:6, 7). நாம் ஊழியம் செய்யும்படி கர்த்தர் அழைத்துள்ள இடமானது நிச்சயமாகக் கொரிந்துவைக் காட்டிலும் அதிகம் வரவேற்பற்றதாய் இருக்க*

*முடியாது! ஆயினும், கர்த்தர் தமது வார்த்தையை எப்பொழுதும் நிறைவேற்றுவார் என்ற இப்பாடமானது நமது இருதயங்களில் ஆழப்பதியும் என்று நான் நம்புகின்றேன். நீங்களே தேவனை நம்பலாம் - பின்வருவது போன்ற அவரது வாக்குத்தத்தங்களையும் நம்பலாம்:*

> *அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28).*
>
> *இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோமர் 8:31).*

*நான் கர்த்தரிலும் அவரது வாக்குத்தத்தங்களிலும் நம்பிக்கையாயிருக்கிறேனா? நீங்கள் அப்படி இருக்கிறீர்களா?*[18]

---

*குறிப்புகள்*

*[1]எதிர்பார்க்கும் வாய்ப்புடைய நிலையில் கொரிந்து நகரில் தேவனுக்கு "அநேக ஜனங்கள்" இருந்தார்கள். யார் இரட்சிக்கப்படுவார்கள் யார் இழந்து போகப்படுவார்கள் என்று தேவன் ஏற்கனவே முன் குறித்திருந்தார் என்று இது அர்த்தப்படுத்துவதில்லை. ஒவ்வொரு மனிதரும் சுவிசேஷத்தை ஏற்கவோ அல்லது புறக்கணிக்கவோ முடியும் என்பதே நாம் படித்திருக்கும் மனமாற்றத்தின் எடுத்துக்காட்டுகள் எல்லாவற்றிலும் வலியுறுத்தப்படுகின்றது. [2]"பலர்" ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றிருந்தார்கள் (வ. 8). பவுலைத் தேவன் பாதுகாத்தது பவுலின் நன்மைக்காக மட்டுமல்ல, ஆனால் கொரிந்துவில் நற்செய்தியை ஏற்றுக் கொண்ட எல்லா ஆத்துமாக்களின் நன்மைக்காகவும்தான்-அதாவது, இந்த ஆத்துமாக்களுக்குப் போதிக்கும் படியாகப் பவுல் கொரிந்து நகரில் காத்திருந்தார். [3]தவறான செயலுக்கு ஒருமனப்படுவதன் எடுத்துக்காட்டொன்று இதில் உள்ளது (இன்னொரு எடுத்துக்காட்டை 5:9ல் காணவும்). ஒருமைப்பாடு மிகவும் முக்கியமானது தான், ஆனால் அது தேவனுடைய சித்தத்தைச் செய்வதைக் காட்டிலும் முக்கியமானது அல்ல. [4]டேசிட்டஸ், பிளீனி, செனகா மற்றும் பலர் இந்த எழுத்தாளர்களில் உள்ளடங்குகின்றனர். [5]அப்போஸ்தலர் நடபடிகளின் நாள் கணக்கீடு மற்றும் 1, 2 தெசலோனிக்கேயர் நிருபங்கள் எழுதப்பட்ட காலக் கணக்கீடு ஆகியவற்றுக்கு இது உதவுகின்றது. கி.பி. 50ன் பனிக்காலம் தொடங்கி, கி.பி. 52ன் வசந்தகாலம் வரையிலும் பவுல் கொரிந்துவில்*

ஊழியம் செய்தார் என்று மிகச் சரியாக நாம் கணக்கிட முடிகின்றது. [6]NCVயில் "our law" என்றுள்ளது. [7]யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் இருந்த முரண்பாடு பற்றி சிலவற்றைக் கல்லியோன் ஏதோ ஒரு வகையில் கேள்விப்பட்டிருந்தார் என்று காணப்படுகின்றது. ஒருவேளை யூதர்கள் தங்கள் குற்றச்சாட்டில் குறிப்பாக "சொற்களையும் நாமங்களை யும்" குறிப்பிட்டிருக்கலாம். "சொற்கள்" என்பதில் அநேகமாக, "இரட்சிப்பு" மற்றும் "உயிர்த்தெழுதல்" என்பது போன்ற சொற்கள் உள்ளடங்கியிருந் திருக்கலாம், "நாமங்கள்" என்பது பற்றிய கேள்வியில் "இயேசு" உண்மை யிலேயே ''கிறிஸ்து''தானா? என்ற கேள்வியை மையக்கருத்தாகச் சுழன்றிருக்கலாம். [8]''கல்லியோன் … கவலைப்படவில்லை'' என்பது சொஸ்தெனேயை அடித்தது பற்றிக் குறிப்பிடுமென்றால், அந்தச் செயல் பாட்டில் அவர் ஏதேனும் நீதியைக் கண்டு இருப்பார். ஒருவேளை அது, "குற்றத்திற்குத் தக்க தண்டனை" என்று அவர் நினைத்திருப்பார். [9]மற்ற இடங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் (எபேசுவைத்தவிர) நீண்ட நாட்களாகப் பவுல் கொரிந்து நகரில் தங்கியிருந்ததால், அவர் ஊழியம் செய்திருந்த சபைகளிலேயே கொரிந்து சபை மிக நன்றாகப் போதிக்கப்பட்ட இடம் என்று நாம் கூற முடியும். ஆனாலும் பிறகு, 1 கொரிந்தியர் நிருபத்தில் அச்சபையில் இருந்த பிரச்சனைகளைப் படிக்கும்போது நாம் திகைப்படை கின்றோம். அவர்கள் மட்டும் அவ்வளவு நன்றாகப் போதிக்கப்பட்டிருக்க வில்லையென்றால், அங்கு இன்னும் அதிக மோசமான பிரச்சனைகள் எழும்பியிருக்கும் என்று ஒரு எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளது மதிப்புள்ள ஒரு குறிப்பு ஆகும். அந்தக் கிறிஸ்தவர்கள் எப்படிப்பட்ட ஒழுக்கவீனம் என்ற சாக்கடைக் குழியில் இருந்து இழுக்கப்பட்டிருந்தார்கள் என்பதை நாம் மனதில் நினைக்க வேண்டும். [10]*Aedile* என்பது "பட்டணத்து உக்கிராணக் காரன்" என்று (ரோமர் 16:23) வசனத்தில் குறிப்பிட்ட பதவியின் இலத்தீன் சொற்றொடர் ஆகும்.

[11]2 கொரிந்தியர் 1:1ல் பவுல், "அகாயா நாடெங்குமுள்ள எல்லாப் பரிசுத்தவான்களுக்கும்" என்று பேசுகின்றார். கொரிந்துவிலும் (2 கொரி. 1:1) மற்றும் கெங்கிரேயாவிலும் (ரோமர் 16:1) சபைகள் நிலைநாட்டப்பட்டன என்று நாம் உறுதியாக அறிகிறோம், அத்தேனேயில் ஒரு சபை நிலைநாட்டப் பட்டிருக்கும் என்று ஆலோசித்தோம் (இவ்விதழில் அப். 17:34க்கான குறிப்புகளைக் காணவும்). ஆயினும் அம்மாகாணம் முழுவதிலும் இன்னும் அதிகமான கிறிஸ்தவர்கள் இருந்திருக்க வேண்டும். [12]இது ஒரு தற்காலிக மான நசரேய விரதம் என்று பொதுவாகக் கற்பனை செய்யப்படுகின்றது (எண். 6:1-21), ஆனால் அவ்விரதத்தின் முடிவில்தான் முடிவெட்டிக் கொள்ளப்படுமேயல்லாது, துவக்கத்தில் அல்ல. மேலும் அவ்வாறு முடி வெட்டிக் கொள்ளுதல் எருசலேமில்தான் செய்வார்களேயல்லாது எருசலேமுக்கு வெளியே அல்ல. பவுலின் விரதமும், செய்யப்பட்ட சடங்கு களும் அநேகமாக யூதமார்க்கப் பின்னணியில் இருந்து பெறப்பட்ட தாயிருக்கும். கிறிஸ்தவத்துடன் முரண்பட்டிராத மற்றும் கிறிஸ்தவமார்க்கத் திலிருந்து விலகச் செய்யாத சில யூதப் பழக்க வழக்கங்களைப் பவுல் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வந்தார் என்பது தெளிவாகின்றது (1 கொரி. 9:20). பின்வரும் இதழ் ஒன்றில் 21:23க்கான குறிப்புகளில் பவுலின் இக்கொள்கை பற்றி இன்னும் அதிக குறிப்புகளைக் காணவும். [13]அநேகமாக

*சபையில் பிரிஸ்கில்லாளின் பணி முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவதற்காக, ரோமர் 16:3 மற்றும் 2 தீமோத்தேயு 4:19 ஆகிய வசனங்களில் போலவே இங்கும் பிரிஸ்கில்லாளின் பெயர் முதலாவதாகக் குறிப்பிடப்படுகின்றது. [14]இது அடிக்கடி நடந்ததில்லை (13:42ஐக் கவனியுங்கள்)! [15]"கர்த்தருக்குச் சித்தமானால்" என்ற சொற்றொடர் பற்றி யாக்கோபு 4:13-15ல் காணவும் (மத். 6:10; ரோமர் 1:12; 15:30; 1 கொரி. 4:19; 16:7; எபி. 6:3 ஆகியவற்றை யும் காணவும்). பவுல் திரும்பவும் அங்கு வர வேண்டுமென்பது தேவனு டைய சித்தமாயிருந்தது என்பதைக் கவனியுங்கள் (19:1). [16]ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் கூடாரத் தொழில் நிறுவனத்திற்குக் "கிளை அலுவலகம்" ஒன்றை நிறுவுவதற்காக எபேசுவில் தங்க விரும்பியிருக்கலாம் என்று ஆலோசிக்கப்படுகின்றது. அவர்கள் கிறிஸ்துவுக்காக அநேக ஆண்டுகள் அவ்விடத்தில் தங்கியிருந்தார்கள் என்பதை மட்டுமே நாம் அறிகின்றோம் (அப். 18:26; 1 கொரி. 16:19). [17]இவ்விடத்தின் சந்தர்ப்பப் பொருள் செசரியா சபைக்குப் பொருந்துகின்றது; "வந்து" மற்றும் "போய்" என்ற வார்த்தைகள் எருசலேம் சபைக்கு நன்றாய்ப் பொருந்துகின்றது (8:5; 9:30, 32; 11:2, 27; 13:31; 15:1, 2, 30). [18]இப்பாடமானது ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், மாற். 16:16; அப். 2:38 ஆகியவற்றைப் பயன்படுத்தி இரட்சிப்புக்கான தேவனுடைய வாக்குத்தத்தத்தை உள்ளடக்கப்படலாம். இப்படிப்பட்ட வசனங்களில் உள்ள வாக்குத்தத்தங்களை நாம் நம்பினால், அவ்வசனங்களில் உள்ள கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிவோம்.*